ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477669 +94 11 2346304
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

வெளியிடுபவர் தொடர்பூட்டல் திணைக்களம்
திகதி 2023.09.14

**உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்துகை நிகழ்ச்சித்திட்டத்தில் ஊழியர் சேமலாப நிதியம் பங்குபற்றுதல்**

ஊழியர் சேமலாப நிதியம், ஒரு தகைமையுடைய பங்கேற்பாளர் என்றவகையிலும் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையின் அங்கீகாரத்துடனும் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானமொன்றினைத் தொடர்ந்து நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சினால் (நிதி அமைச்சு) ஆக்கப்பட்ட அழைப்பின் நியதிகளின் பிரகாரம் ஊழியர் சேமலாப நிதியமானது உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்துகை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஊழியர் சேமலாப நிதியத்தின் திறைசேரி முறிகள் சொத்துப்பட்டியலினை பரிமாற்றுவதற்கான விருப்பறிவிப்பை சமர்ப்பித்துள்ளதென நிதியத்தின் உறுப்பினர்களுக்கு அறிவிக்க விரும்புகின்றது. அதற்கமைய பின்வருவன உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுகின்றன.

அ. 2023 யூலை 01 அன்றைய தீர்மானத்தின் மூலம் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு பொதுப்படுகடன் மேம்படுத்துகை உபாயத்தின் மீதான அரசாங்கத்தின் கொள்கையினை நிதி அமைச்சு 2023 யூலை 04 அன்று அறிவித்தது.

ஆ. அறிவித்தலின் பிரகாரம் நிதி அமைச்சானது ஏனையவற்றிற்கு மத்தியில், திறைசேரி முறி முதலீடுகளிலிருந்து கிடைக்கின்ற வரிவிதிக்கத்தக்க வருமானத்தின் மீது ஓய்வுகால நிதியங்கள் 30 சதவீதங் கொண்ட கணிசமான உயர்ந்த வரியை செலுத்துவதைத் தவிர்ப்பதற்கு உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்துகையினை அமைப்பதற்கு புதிய திறைசேரி முறிகளாக ஓய்வுகால நிதியங்களின் ஏற்கனவே காணப்படுகின்ற திறைசேரி முறிகளை மாற்றுவதை/பரிமாற்றுவதை அடையாளப்படுத்தியுள்ளது. இவ்வரியானது 2023ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க உண்ணாட்டரசிறை (திருத்தம்) சட்டத்தின் பிரகாரம் 2023 ஒத்தோபர் 01 இலிருந்து பிரயோகிக்கப்படும். தற்போது, திறைசேரி முறிகளிலிருந்தான வருமானம் உள்ளடங்கலாக ஊழியர் சேமலாப நிதியத்தின் வருமானத்திற்கு ஏற்புடைய வரி வீதம் 14 சதவீதமாகும் என்பதுடன் 14 சதவீதங்கொண்ட சலுகை வரி வீதத்தை 2023 செத்தெம்பர் 30ஆம் திகதிக்கு அப்பாலும் தொடர்ந்து முன்னெடுப்பது சட்டத்தில் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு உள்நாட்டு படுகடன் மேம்படுத்துகையில் ஊழியர் சேமலாப நிதியத்தின் செயல்திறன்வாய்ந்த பங்கேற்பின் மீதே நிகழக்கூடியதாகும்.

இ. படுகடன் மாற்றுதல்/ பரிமாற்றுதல் பற்றிய அனைத்தையுமுள்ளடக்கிய விபரங்களை நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 2023 யூலை 04ஆம் திகதியிடப்பட்ட பரிமாற்று விஞ்ஞாபனமும் அதனைத் தொடர்ந்து வழங்கப்பட்ட திருத்தங்களும் உள்ளடக்குகின்றன. மேலும், படுகடன் பரிமாற்றத்தில் முன்மொழியப்பட்ட நியதிகள் மற்றும் அதன் உள்ளார்ந்தங்களை எடுத்துரைத்து நிதி அமைச்சு 2023 யூலை 07 அன்று முதலீட்டாளர் எடுத்துரைப்பினை நடாத்தியதுடன் இவ்வெடுத்துரைப்பைத் தொடர்ந்து எழுப்பப்பட்ட வினாக்களுக்கு தெளிவுபடுத்தல்களையும் வழங்கியது. பரிமாற்று விஞ்ஞாபனத்தின் பிரகாரம் உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்துகையின் சட்ட, வரி, நிதியியல், ஒழுங்குமுறைப்படுத்தல், கணக்கீடு மற்றும் தொடர்புடைய நோக்குகளுடன் தொடர்புபடுத்தி விருப்பறிவிப்புகளை செய்வதன் அல்லது செய்யாமையின் விளைவுகளைப்

பகுப்பாய்வு செய்வதற்கு தகைமையுடைய உடமையாளர்கள் வேண்டப்பட்டிருந்தனர். இது தொடர்பிலான அனைத்து தொடர்பூட்டல்களையும் https://treasury.gov.lk/web/ddo என்ற இணையத்தளத்தின் ஊடாகப் பெற்றுக்கொள்ளலாம்.

ஈ. இந்நோக்கில், இலங்கை மத்திய வங்கியின் ஆலோசனையுடன் நிதி அமைச்சினால் தயாரிக்கப்பட்ட "இலங்கையின் படுகடன் மறுசீரமைத்தல்" தலைப்பிடப்பட்ட எடுத்துரைப்பு 2023 யூன் 28 அன்று அமைச்சரவைக்கு முன்வைக்கப்பட்டது. 2023 யூன் 29 மற்றும் 30ஆம் திகதிகளில் எடுத்துரைப்பு மற்றும் அதனைத்தொடர்ந்து இடம்பெற்ற விரிவான கலந்துரையாடல்கள் ஊடாக ஊழியர் சேமலாப நிதியம் மீது உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்துகையின் எதிர்பார்க்கப்படும் தாக்கம் தொடர்பில் அரச நிதி மீதான குழுவிற்கு தெரியப்படுத்தப்பட்டது. மேலும், அரச நிதி மீதான குழு, 2023 செத்தெம்பர் 07அன்று இடம்பெற்ற அதன் கூட்டத்தில் ஓய்வுகாலநிதியங்கள் மீது உண்ணாட்டரசிறைச் சட்டத்திற்கு முன்மொழியப்பட்ட திருத்தங்களின் தாக்கம் கலந்துரையாடப்பட்டது.


உ. பரிமாற்று ஒப்பந்தத்தின் பிரகாரம் உள்நாட்டு படுகடன் மேம்படுத்துகை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பின்வரும் இரண்டு தெரிவுகள் கிடைக்கப்பெற்றன.

i. **பரிமாற்றுத் தெரிவு:** 2027 தொடக்கம் 2038 வரை முதிர்ச்சியடைகின்ற 12 புதிய திறைசேரி முறித் தொடர்களைக் கொண்டு ஏற்கனவே காணப்படுகின்ற திறைசேரி முறிகளின் குறைந்தபட்ச வேண்டப்பட்ட தொகையினை ஊழியர் சேமலாப நிதியம் பரிமாற்றமுடியும். இப்புதிய முறிகள் 2026 வரை ஆண்டிற்கு 12 சதவீதம் மற்றும் அதன் பின்னர் ஆண்டிற்கு 9 சதவீதம் கொண்ட வட்டிக் கொடுப்பனவு வீதமொன்றுடன் வழங்கப்பட்டுள்ளன. திறைசேரி முறிச் சொத்துப்பட்டியலிலிருந்து கிடைக்கப்பெற்ற அதன் வரிவிதிக்கத்தக்க வருமானத்தின் மீது ஊழியர் சேமலாப நிதியம் ஆண்டிற்கு 14 சதவீத வருமான வரியினைத் தொடர்ந்தும் செலுத்தும்.

ii. **பரிமாற்றமின்றிய தெரிவு:** ஊழியர் சேமலாப நிதியமானது ஏற்கனவே காணப்படுகின்ற திறைசேரி முறிகளை பரிமாற்றாதிருப்பதற்குத் தீர்மானிக்குமாயின், திறைசேரி முறிச் சொத்துப்பட்டியலிலிருந்து கிடைக்கின்ற வரி விதிக்கத்தக்க வருமானத்திற்கு 30 சதவீத வரி வீதம் ஏற்புடையதாகவிருக்கும்.

ஊ. மேற்குறித்த இரு தெரிவுகளின் கீழும் உள்நாட்டு படுகடன் மேம்படுத்துகை நிதியத்தினை எவ்வாறு பாதிக்கலாம் என்பதனை நாயணச் சபை கவனமாக ஆராய்ந்துள்ளது. அதற்கமைய நிதியம் மீது உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்துகையின் சாதகமான தாக்கத்தினை உறுதிசெய்வதற்கு நாணயச் சபைக்கு உதவுவதற்காக இலங்கை மத்திய வங்கியின் உள்ளக அலுவலர்கள் தொடர்புடைய பகுப்பாய்வுகளை நடாத்தியுள்ளனர். பல முன்மதிமிக்க மற்றும் உண்மையான ஊகங்களின் அடிப்படையிலும் மேலும் உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்துகையின் சட்ட, வரி, நிதியியல், ஒழுங்குமுறைப்படுத்தல், கணக்கீடு மற்றும் தொடர்புபட்ட நோக்குகள் என்பவற்றை கருத்தில் கொண்டும் அத்தகைய மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இரு தெரிவுகளின் கீழும் திறைசேரி முறிச் சொத்துப் பட்டியிலின் எதிர்பார்க்கப்பட்ட ஆதாயங்களின்

தொகுப்பு கீழுள்ள வரைபடத்தில் தரப்பட்டுள்ளது. தற்போது மொத்த நிதியத்தின் 88 சதவீதத்தை திறைசேரி முறிச் சொத்துப்பட்டியல் உள்ளடக்குவதுடன் எஞ்சியவற்றில் பாரிய பங்கு திறைசேரி உண்டியல்களில் காணப்படுகின்றன. திறைசேரி உண்டியல்கள் சொத்துப்பட்டியலும் புதிய நிதியங்களும் கீழுள்ள வரைபடத்தில் காண்பிக்கப்பட்ட இரு தெரிவுகளின் கீழும் திறைசேரி முறிச் சொத்துப்பட்டியலின் நிகழக்கூடிய ஆதாயங்களைவிட நிதிய சொத்துப்பட்டியலின் மொத்த ஆதாயம் உயர்வாக இருக்கக்கூடிய விதத்தில் நிலவுகின்ற சந்தை வீதங்களில் மீள முதலீடு செய்யலாம்.




*குறிப்பு: குறிப்பிடப்பட்ட எடுகோள்கள் மற்றும் நியாயமானளவு நியாயப்படுத்தத்தக்க காரணிகள் அத்துடன் தொடர்புடைய கணிப்புகளைச் செயலாற்றுகின்ற நேரத்தில் கிடைக்கத்தக்க தகவல்கள் என்பவற்றின் அடிப்படையில் ஆக்கப்பட்ட எதிர்வுகூறல்கள் என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடத்தில் காட்டப்பட்ட தொகைகள் தீர்மானிக்கப்பட்டுள்ளன. இவ் எடுகோள்கள், எதிர்வுகூறல்கள் மற்றும் கருத்திற்கொள்ளப்பட்ட ஏற்புடைய வரி வீதங்கள் என்பன கைகூடாத சந்தர்ப்பங்கள் காணப்படலாம். அத்தகைய சந்தர்ப்பங்களில் ஏற்கனவே எடுத்துரைக்கப்பட்டுள்ள பெறுபேறுகள் அல்லது எறிவுகள் மாறுபடலாம். வரைபடத்தில் காண்பிக்கப்படாத போதிலும் எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால வட்டி வீதங்களில் சில மாறுதல்களுக்காக எடுகோள்கள் பரீட்சிக்கப்பட்டதுடன் பெறுபேறுகளின் ஒப்பீட்டு வீதங்கள் மாற்றமடையாதிருந்தது உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.*

எ. மேலே உள்ள திறைசேரி முறிச் சொத்துப்பட்டியலின் வருடாந்த ஆதாய வீதத்தினைத் தீர்மானிக்கையில் உரியவாறு கருத்திற்கொள்ளப்பட்ட முக்கிய காரணிகளும் எடுகோள்களும் கீழே தரப்பட்டுள்ளன.

i. ஊழியர் சேமலாப நிதியத்தின் திறைசேரி முறிச் சொத்துப்பட்டியலின் முகப்பெறுமதி ரூ.3,220 பில்லியன் ஆகும். குறைந்தபட்ச பங்கேற்றல் தேவைப்பாட்டினை நிறைவுசெய்யும் பொருட்டு முகப்பெறுமதி அடிப்படையில் திறைசேரி முறிச் சொத்துப்பட்டியலின் முகப்பெறுமதியின் 78 சதவீதம் பரிமாற்றப்படவேண்டியிருந்தது.

ii. அவை உரியகாலத்தில் செலுத்தப்படவேண்டியவையாக வருகின்றமையினால் படுகடன் பரிமாற்றத்தின் கீழ் வழங்கப்படும் புதிய திறைசேரி முறிகள் உள்ளடங்கலாக திறைசேரி முறிகளுடன் தொடர்புடைய அனைத்து படுகடன் கடப்பாடுகளையும் அரசாங்கம் தீர்ப்பனவு செய்யும்.

iii. மேற்குறிப்பிடப்பட்ட முதிர்ச்சிகள் மற்றும் வட்டி வருமானங்களில் இருந்து கிடைக்கும் காசுக் கிடைப்பனவுகள் 2023 இற்கு 13.50 சதவீதம், 2024 இற்கு 12.00 சதவீதம், 2025 இற்கு 10.50 சதவீதம் 2026 இற்கும் அதனைத் தொடர்ந்துவரும் ஆண்டுகளிற்கும் 10 சதவீதம் கொண்ட வீதங்களிலும் ஆறு ஆண்டு திறைசேரி முறிகளில் மீள முதலீடு செய்யப்படும். (வேறுபட்ட மீள்முதலீட்டு வீதச் சூழ்நிலைகளின் கீழ் எதிர்பார்க்கப்படும் ஆதாயங்களும் கணிக்கப்பட்டுள்ளன, இவற்றின் ஆதாய வீதங்கள் ஒரேமாதியாகக் காணப்படுகின்றன).

iv. பரிமாற்றுத் தெரிவில் ஊழியர் சேமலாப நிதியம் பங்கேற்குமாயின் 14 சதவீதம் கொண்ட தற்போதைய வரி வீதம் பிரயோகிக்கப்படும். எனினும் படுகடன் பரிமாற்றத்தில் ஊழியர் சேமலாப நிதியம் பங்கேற்கவில்லையாயின் திறைசேரி முறிகளின் வரி விதிக்கத்தக்க வருமானத்தின் மீது ஏற்புடைய வரி வீதம் 30 சதவீதமாக அதிகரிக்கப்படவுள்ளது, இது பரிமாற்றத்திற்கு பிந்திய ஏற்புடைய வரி வீதத்தின் இரு மடங்கிற்கும் அதிகமாகும். இவ்வரி வீதங்கள் 2038 வரை மாற்றமின்றியே காணப்படுமென மேலும் ஊகிக்கப்பட்டிருந்தது.

ஏ. முழுமையான பகுப்பாய்வொன்றைத் தொடர்ந்தும் மேலே தரப்பட்ட தூண்டக்கூடிய காரணிகளைக் கருத்தில் கொண்டும் நாணயச் சபையானது திறைசேரி முறிகளை பரிமாற்றுவதிலிருந்து தோன்றுகின்ற முன்னறியத்தக்க எதிர்காலத்தில் திரவத்தன்மை தடைகளை ஊழியர் சேமலாப நிதியம் எதிர்கொள்ளாது எனவும் உறுப்பினர்களின் கணக்குகளில் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட நடைமுறை நிலுவைகளுக்கு ஏதேனும் குறைப்பினை விளைவிக்காது எனவும் திருப்திப்படுகின்றது. மேலும், 2023 தொடக்கம் 2026 (சொல்லப்பட்ட இரு ஆண்டுகளும் உள்ளடங்கலாக) வரை அவர்களது நிலுவைகள் மீது உறுப்பினர்களுக்கு குறைந்தபட்சம் 9 சதவீத வருடாந்த வட்டி பகிர்ந்தளிப்பினை உத்தரவாதமளிப்பதற்கான நியதிச்சட்ட ஏற்பாடுகளை சட்டமாக்குவதற்கு 1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் 14ஆம் பிரிவுக்கான திருத்தத்தினை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு 2023.08.07 அன்று நடைபெற்ற அதன் கூட்டத்தில் அமைச்சரவை அங்கீகரித்துள்ளது.

ஐ. ஊழியர் சேமலாப நிதியத்திற்கான உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்துகையின் தாக்கம் பற்றி தெளிவுபடுத்துவதற்கு தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு கௌரவ அமைச்சர், தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் செயலாளர், தொழில் ஆணையாளர் நாயகம், திறைசேரிக்கான துணைச் செயலாளர் ஆகியோருடன் சந்திப்பொன்று நடைபெற்றதுடன் மேற்படி கூட்டத்தில் இடம்பெற்ற விவாதங்களுக்கிணங்க பரிமாற்றமல்லாத மாற்றுவழியுடன் ஒப்பிடுகையில் படுகடன் பரிமாற்றத்தைத் தெரிவுசெய்வது பாரிய அனுகூலங்களைக் கொண்டுள்ளது என பங்கேற்றவர்கள் மத்தியில் முழுமையாக ஒருமித்த கருத்து நிலவியது.

ஒ. உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்துகையில் ஊழியர் சேமலாப நிதியத்தின் பங்கேற்றல் பற்றிய அவர்களது கரிசனைகளை வெளிப்படுத்துவதற்கு பல தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளுடன் ஆளுநர் தலைமையில் இலங்கை மத்திய வங்கியின் மூத்த முகாமைத்துவத்துடன் இணைந்து கலந்துரையாடலொன்று இடம்பெற்றதுடன் அவர்களது அபிப்பிராயங்களை முன்வைக்கும் பொருட்டு அவர்களுக்கு முழுமையான வாய்ப்பு வழங்கப்பட்டது.

உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்துகையின் கீழ் திறைசேரி முறி பரிமாற்றத்தில் ஊழியர் சேமலாப நிதியத்தின் பங்கேற்புத் தொடர்பிலான தீர்மானத்தினை மேற்கொள்ளுகின்றபோது கவனத்திற்கொள்ளப்பட்ட காரணிகள்/ கரிசனைகள் பற்றி ஊழியர் சேமலாப நிதியத்தின் உறுப்பினர்களுக்கு அறிவிப்பதற்கு மேற்குறித்த தகவல்கள் வெளியிடப்பட்டு பரப்பப்பட்டுள்ளன.

இரண்டு தெரிவுகளில் பல முன்மதிமிக்க மற்றும் நடைமுறைசார்ந்த எடுகோள்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ள மதிப்பீடுகளைக் கருத்திற்கொள்கையில் படுகடன் பரிமாற்றமானது சிறந்த தெரிவாக தென்படுகின்றதென நாணயச் சபை எதிர்பார்த்தது. மேலும், முன்மொழியப்பட்ட படுகடன் பரிமாற்றம் மற்றும் அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற வேறு மறுசீரமைப்புக்கள் என்பவற்றுடன் பொது நிதியின் நிலைபெறுதன்மையானது அதன் படுகடனை தீர்ப்பனவு செய்வதற்கான அதன் இயலுமையினை மீளநிலைப்படுத்துமென நாணயச் சபை கருதுகின்றது. அளவுக்கு மீறிய தாமதமின்றி படுகடன் நிலைபெறு தன்மை மீள நிலைப்படுத்தப்பட்டாலன்றி ஊழியர் சேமலாப நிதியத்தினால் வைத்திருக்கப்படும் பரிமாற்றத்திற்கு முந்திய முறிகள் மீதான கடப்பாடுகளை முழுமையாக தீர்ப்பனவு செய்ய முடியாத உயர்வான இடர்நேர்வு அரசாங்கத்திற்கு காணப்படுகின்ற நிலையில் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு மிக மோசமான விளைவுகளையும் வழிவகுக்கும் என்பதை நாணயச் சபையும் அறிந்திருந்தது. ஆகையினால் திறைசேரி முறிகளில் ஊழியர் சேமலாப நிதியத்தின் சொத்துக்களின் பாரியளவான பங்கு முதலீடு செய்யப்பட்டுள்ளது என்பதைக் கருத்திற்கொள்கையில் கிடைக்கப்பெறுகின்ற இரு தெரிவுகளின் அடிப்படையில் உள்நாட்டு படுகடன் மேம்படுத்துகையினை தெரிவுசெய்தலானது ஊழியர் சேமலாப நிதியத்தின் உறுப்பினர்களின் சிறந்த நலனாக அமைந்திருந்தது. உள்நாட்டு படுகடன் மேம்படுத்துகையில் பங்கேற்றதன் பின்னர் ஊழியர் சேமலாப நிதியத்தின் உறுப்பினர்களின் தற்போதைய நிலுவைகள் குறைக்கப்படாது என்றும் முன்னறிகின்ற எதிர்காலத்தில் நிதியம் உறுப்பினர்களுக்கு ஆண்டிற்கு குறைந்தபட்சம் 9 சதவீத ஆதாயத்தினை பகிர்ந்தளிப்பதற்கு இயலுமாகவிருக்குமென்றும் குறிப்பிடுவதும் முக்கியமாகும்.

முடிவாக, ஊழியர் சேமலாப நிதியத்தின் கட்டுக்காவலராக இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையானது கிடைக்கப்பெறுகின்ற இரு தெரிவுகளையும் கருத்தில் கொண்டு நிதியத்தின் உறுப்பினர்களின் சிறந்த நலனுக்கான நீண்டகால நோக்குடன் படுகடன் பரிமாற்றல் விருப்பறிவிப்பை தெரிவுசெய்வதற்கு தீர்மானித்துள்ளது. அதற்கமைய, படுகடன் பரிமாற்றத்திற்காக ரூ.2,667,512,169,237 முகப்பெறுமதியுடைய திறைசேரி முறிகளினை நிதியத்திற்கான அதன் ஒப்பீட்டு நன்மைகளைக் கருத்திற் கொண்டு குறைந்தபட்ச பங்கேற்புத் தேவைப்பாட்டிற்கு மிகையாக மேலதிக ரூ.149,890,740,000 தொகையினை முன்வைத்துள்ளது. அதை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு சமமான முகப்பெறுமதியுடன் புதிய திறைசேரி முறிகளை ஊழியர் சேமலாப நிதியத்திற்கு வழங்கியுள்ளது.